செய்தி வெளியீடு எண்:367 நாள் : 22.07.2015

செய்தி வெளியீடு

**<u>மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஊரக வளர்ச்சித் துறை பணிகள் குறித்து ஆய்வு.</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் மாநில அளவிலான வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (22.07.2015) தலைமைச் செயலகத்தில் உள்ள தொழில்துறை கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் உன்னதத் திட்டங்களான தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய்) திட்டம், ஊரக குடியிருப்பு திட்டங்களான முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், ‘‘தானே’’ வீடு வழங்கும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல், ஊரக சாலை பணிகள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப்பணிகளையும் தரமானதாகவும், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்கவும், உரிய காலக் கெடுவிற்குள் மக்கள் பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுரை வழங்கினார்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஏழை மகளிரை குடும்ப தலைவராக கொண்ட குடும்பங்களுக்கு சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு (2015–16)**

**70 ஆயிரம் பயனாளிகள் என நிர்ணயிக்கப்பட்டு 01.07.2015 அன்று துவக்கப்பட்டு இதுவரை 6498 பயனாளிகளுக்கு ஊரக பகுதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது, நகர்புறங்களில் 01.08.2015 முதல் பயிற்சி அளிப்பதற்கு பயனாளிகள் தேர்வும் நடைப்பெற்று வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 21,304 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது அகில இந்திய அளவில் மிகப் பெரிய சாதனையாகும்.**

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், சட்டமன்ற பேரவை விதி எண்110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் உள்ளிட்ட அனைத்து அறிவிப்புகளின் கீழ், அனைத்து திட்டப்பணிகளையும் விரைந்து செயல்படுத்தி, காலதாமதமின்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. கா.பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் / திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம் திருமதி வி.அமுதவல்லி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு எஸ். நடராஜன், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**